2002 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தனியார் துறை நிறுவனங்கள் கண்டுபிடித்தாலும், பல்கலைக்கழகத்திலே அவர்கள் அதற்குரிய அனுமதியைப் பெற்றாகவேண்டும். தங்களுடைய ஆராய்ச்சியின் விளைவுகளைக் கொடுத்த பிறகுதான் அனுமதி வழங்கப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 77, திருமதி வி. சிவகாமி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

77—

பெண்கள் விடுதி

***6764—திருமதி வி. சிவகாமி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியில், பணிபுரியும் பெண்களுக்கான விடுதி அமைத்து, சமூக நலத் துறை மூலம் அல்லது அரசு நிதியுதவியுடன் தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டத்தில், "விஷ்ணு லக்ஷ்மி டிரஸ்ட்" என்ற தொண்டு நிறுவனம், மத்திய அரசிடமிருந்து கட்டட மானியம் பெற்று தாராபுரத்தில் பணிபுரியும் மகளிர் விடுதியை நடத்தி வருகிறது. இதைத் தவிர வேறு பணிபுரியும் மகளிர் விடுதி அரசின் சார்பில் தாராபுரம் தொகுதியில் செயல்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி வி. சிவகாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குவைத் நாட்டுப் பெண் தலால் ஆஸ்மியை விடுதலை செய்து, அந்தப் பெண்மணிக்கு நம்முடைய நாட்டிலே குடியுரிமை வழங்க ஏற்பாடு செய்யும் தானைத் தலைவியை முதலாவதாக வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல தமிழகத்திலே நாளை வரலாற்றிலே தாலாட்டுப் பாடும் தாய்மார்கள்கூட, தமிழகத்தை ஆண்ட அரசின் நிலையை நினைத்து,

இந்த நாட்டிலே தைரியம் கொள்ளடா மகனே என்று தாலாட்டுகூட பாடுவார்கள். அதைப்போல, என்னைப்போல் துன்பம் என்னும் தொல்லை என்னும் நோய் தொடரும் பெண்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக விளங்கும் அவர் முகத்தைப் பார்த்தாலே மருந்தாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி). தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே அந்த தலால் ஆஸ்மியின் சார்பாகவும், அதேபோன்று சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல என்னுடைய ஊர், தாராபுரம், ஈரோடு, கோவை போன்ற பெருநகரங்களைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு காலத்திலே கொங்கு நாடு என்று மிகச் சிறப்பாக வளம் வாய்ந்த நாடாக இருந்தது. ஆனால் பிறகாலத்திலே அப்பெருமை எப்படியோ கோவையையும், ஈரோட்டையும் அடைந்துவிட்டது. அது நம் முன்னோர்களுக்கு நிறைய தெரியும். இருந்தபோதிலும்கூட, பெண்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அம்மையாருடைய ஆட்சியிலே என்னுடைய பகுதியிலே தங்கிப் படிக்கும் பெண்கள், வேலைக்குச் செல்லும் பெண்கள், வெளியூரிலிருந்து, வெளி மாவட்டங்களிலிருந்து வந்து தங்கி இருக்கிறார்கள். தாராபுரத்தில் நிறைய பாதுகாப்பு கிடைக்கும் என்று தாய்மார்கள் நம்பி அங்கே தனியாக விடுகிறார்கள். அப்பகுதியிலே அவர்கள் தனித் தனியாக வீடுகளில் தங்கி தனியார் நிறுவனங்களில் வேலை புரிகிறார்கள், அரசு நிறுவனங்களில் வேலை புரிகிறார்கள். அவர்களுக்காக தனியாக ஒரு தொண்டு நிறுவனம் மூலமாகவோ, அல்லது சமூக நலத் துறை மூலமாகவோ ஒரு கட்டடம் கட்டி அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தால் எனது ஊர் இவ்வரசை சிறப்பாக மகிமைபடுத்தும் என்று தெரிவித்துக்கொண்டு, கொங்குநாடு மிகச் சிறப்பு வாய்ந்த நாடு. அந்த நாட்டிலே தலைநகராக நான்கு புறமும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு புறமும் பீரங்கிமேடு என்று ஏற்படுத்தி . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சிவகாமி, கட்டடம் கட்டப்படுமா, அவ்வளவுதானே? உட்காருங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையிலே தற்போது கேள்வி எழுப்பிய மாமன்ற உறுப்பினர் பேசிய பேச்சை நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

2002 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம், பதில் மட்டும் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: அவர் எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டியதைப் போன்று எதிரிலே இருக்கின்ற மீதி உறுப்பினர்களும் பாராட்டுகின்ற காலம் வெகுதொலைவில் இல்லை என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களால் கட்டப்படும், பணிபுரியும் மகளிர் விடுதிக்கு கட்டடம் கட்டுவதற்கான மொத்தச் செலவிலே 75 சதவீதம் மத்திய சர்க்கார் மானியமாக வழங்குகிறது. மொத்த மதிப்பீட்டில் 15 சதவீதம் அல்லது 35 ஆயிரம் ரூபாய், இதில் எது குறைந்த தொகையோ அதை மாநில சர்க்கார் வழங்குகிறது. தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுவதற்கு முன்வந்து கேட்பார்களேயானால் மாநில சர்க்கார், மத்திய சர்க்காருக்குப் பரிந்துரை செய்கிறபோது தாராபுரத்தில் இதே தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் யாராவது முன்வந்தால் அரசு அதை ஆய்ந்து பார்த்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 78, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

78—

கூடுதல் பள்ளிக்கட்டடம்

***7161—திரு. மே.ப. காமராஜ்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பச்சணம்பட்டி ஊராட்சியிலுள்ள ஆட்டுக்காரனூர் ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் கூடுதல் பள்ளிக்கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?